Registered as a News Paper   பக்கங்கள் 06   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 08   திருவள்ளுவர் ஆண்டு 2024   தை 18   (31-01-1993)   ஞாயிற்றுக்கிழமை   ஓசை 348

## வன்னி ஆஸ்பத்திரிகளில் மருந்துத் தட்டுப்பாடு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடு வைத்தியசாலைகளில் முக்கியமான மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இங்கு தனியார் வர்த்தக நிலையங்களிலும் இம் மருந்துப் பொருள்களை பெற்று கொள்ள முடியாதுமக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்கொள்கின்றனர். வவுனியாவில் இருந்து மருந்துப் பொருள்களை எடுத்துவரமுடியாமலும், இராணுவ கெடுபிடியினாலும் போக்குவரத்து காரணமாக நோயாளர்களை [6 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளின் நல்லெண்ண முயற்சியும் அரசாங்கத்தின் அசமந்தப்போக்கும்

## அமைதி ஏற்படுத்த துரித நடவடிக்கையாம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், திருக்கோணமலை மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலகங்கள் திறக்கப்பட இருப்பதாகவும், ஜனாதிபதி இடம்பெயர் சேவையை திருக்கோணமலையில் ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார்.

## தங்கக் கடத்தல் கட்டுநாயக்காவில் பிடிபட்டது

[கொழும்பு]

சிங்கப்பூரிலிருந்து ஒருகிலோ எடையுள்ள 100 தங்கச் சங்கிலிகளை கடத்திவர முயன்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பிடிபட்டார்.

இச்சங்கிலிகள் குழந்தைகளை தள்ளிச் செல்லும் வண்டில் ஒன்றின் கைப்பிடிக் குழாய்க்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாம்.

இவ்வண்டில் வழமையிலும் அதிகபாரமாக இருந்தமையால் சந்தேகம் கொண்டு குழாய்களை வெட்டிப் பார்த்தபோதே இக்கடத்தல் கண்டு பிடிக்கப்பட்டது.

இவரை கூட்டிச்செல்ல வென விமான நிலையத்திற்குச் சென்ற வேறு மூவரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

## அரசின் கொள்கையினால் புத்தி ஜீவிகள் வெளியேற்றம்

(கொழும்பு)

பிரேமதாசா அரசாங்கத்தின் பழிவாங்கும் கொள்கையினால் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இன்னும் சிறிது காலத்தில் புத்திஜீவிகளைத் தேடிப் பிடிக்க வேண்டிய நிலை ஏற்படும்.'' இவ்வாறு கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளர் அனுர வீரசேகர தெரிவித்தார்

நுகேகொடவில் அரசக்கு (6 ஆம் பக்கம் பார்க்க)

## அங்கிலிக்கன் ஆயர் கவலை

(கொழும்பு)

''விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்கையுடன் தென்னிலங்கைக்கு வந்தேன். இந்தப் பணியைத் தொடர்ந்து செய்வதா, அல்லது பணியை நிறுத்துவதா என்பதை தென்னிலங்கை அரசியல் வாதிகளே தீர்மானிக்க வேண்டும்'' இவ்வாறு யாழ். விஜயம் செய்து திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் அதி வண. கென்னத்பெர்னாண்டோ 'சுலங்க' என்னும் சிங்களப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகள் பிரச்சினைக்கு தீர்வுகான தென்னிலங்கையில் இருந்து வரும் எவருடனும் பேசுவதற்கு தயாராக இருப்பதாகவும், அதைப் பற்றி எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை எனவும்,

நம்பிக்கையின் அடிப்படையில் தென்னிலங்கை பிரதிநிதிகளும், வட-கிழக்கு பிரதிநிதிகளும் பேசுவதையே தாம் விரும்புவதாகவும், வடபகுதி மக்கள் துன்பத்தையும், சுமைகளையும் சுமக்கின்றார்கள், அவர்கள் மிகவும் எளிமையாக வாழ்கின்றார்கள், அவர்களின் வாழ்வு எமக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைய வேண்டும் எனவும் கூறினார்.

தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய ஒரு நல்ல தீர்வை பாராளுமன்றதெரிவுக்குழு முன்வைக்க வேண்டும் என்றும் அத்துடன் யாழ்ப்பாணத்திற்கு சீரான போக்குவரத்திற்கு ஒழுங்குகள் செய்ய வேண்டும் அதன் மூலமே மக்களின் நலனில் அரசாங்கம் அக்கறைகொள்வதாக கருதமுடியும் எனவும் தமிழ் மக்களின் எதிர்கால சுபீட்சத்தை தொடர்ந்து இருள் சூழவிட முடியாது. துன்பப் படுபவர்களுக்கு நாம் உதவ [6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜே. ஆர். அரசை பணியவைக்க தமிழரைப் பயன்படுத்தியது

### இந்தியா குறித்து றோகான் குணவர்த்தன

(கொழும்பு)

''கண்ணி வெடிகள் வைப்பதற்கு விடுதலைப் புலிகளுக்கு வட இந்தியாவிலுள்ள முகாம்களில் வைத்து இந்தியாவே பயிற்சியளித்தது. இத்தகைய ஒரு கண்ணிவெடியினாலேயே ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார்''. இவ்வாறு றோகான் குணவர்த்தன எழுதிய 'ஒத்துக்கொள்ளக் கூடிய காரணங்கள்'' எனும் நூல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நூலில் மேலும்: மேற்குலக நாடுகளுடன் ஜே. ஆர் அரசு பேணிய நல்லுறவு, ஜே ஆரின் வெளியுறவுக் கொள்கை என்பன இந்தியாவைப் பதற்றமடையச் செய்தது. இதனால் தமிழர்களுக்கு உதவுவதாக கூறிக்கொண்டு தனது நலனைப் பேணுவதற்கான முயற்சியில் இந்தியா இறங்கியது.

இதற்கென திட்டங்கள் தீட்டப்பட்டு 'றோ' அமைப்பு செயற்படுத்தியது. தமிழ் இயக்கங்களுக்கு உதவி செய்து ஜே. ஆர். அரசைப் பணிய வைத்தது. பின்னர் புலிகளுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஜே. ஆர். அர [6 ஆம் பக்கம் பார்க்க]

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் இன்று 9 30 மணிமுதல் 10. 00 மணி வரை மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் தமது மீட்புநிதிக்கடனை இக்குறித்த நேரத்தில் செலுத்த முடியும் என மீட்புநிதிப் பொறுப்பாளர் செ. வெற்றி அரசன் தெரிவித்துள்ளார்.

## மந்திரி சபையில் மாற்றம்; ஒஸிக்கு பதவி கிடைக்கும்?

பிரேமதாசாவின் அமைச்சரவையில் விரைவில் மாற்றம் ஏற்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போதைய மந்திரிகள் சிலருடைய நடவடிக்கை குறித்து பிரேமதாசா அதிருப்திகொண்டிருப்பதாகவும் இதனால் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ருக்மன் சேனநாயக்க ஒஸி அபயகுணசேகர ஆகியோர் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு மந்திரிப் பதவிகள் வழங்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## வன்னிபிரதேசத்தில் இன்று ஊரடங்கு

[கொழும்பு]

வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் இன்றுகாலை 10.00 மணிமுதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட உள்ளதாக கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் நேற்று அறிவித்தது.

## ராணுவப் பிடிக்குள் 340 பொதுமக்கள்

### வண.பயஸ் அடிகள் தகவல்

[குருநகர்]

இளவாலை, மாதகல் பகுதிகளில் சிறிலங்கா இராணுவப் பிடிக்குள் இன்னமும 340 பேர்கள் சிக்குண்டிருப்பதாக அறியப்படுகிறது.

அவர்கள் அனைவரும் மூன்று வெவ்வேறு முகாம்களில் தங்கியுள்ளனரென்றும்- அவர்களின் பெயர் விபரங்கள் கிடைக்கவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது

இளவாலை கன்னியர்மடம் மற்றும் வயோதிபர் இல்லத்திலுமாக 258 பேர்கள் தரித்திருப்பதாகவும்-

மாதகல் அந்தோனியார் தேவாலயத்திற்குப் பின்புற முகாமில் 92 பேர்கள் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மாரீசங்கூடல், விளான், போயிட்டிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இளவாலைப் பகுதியிலும்-

மாதகலைச் சேர்ந்தோர் மாதகலிலும் இருப்பதாக சமீபத்தில் அங்குசென்று திரும்பிய வண- இ. ம. பயஸ் அடிகள் தெரிவித்தார். [21]

## மன்னார் ஆயர் யாழ். வந்தார்

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு ஜோசவ் ஆண்டகை நேற்று இரவு யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் மன்னார் மாவட்ட ஆயராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் முதல் தடவையாக யாழ். வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உணவுப் பொருள்களுடன் குமண புறப்பட்டது

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மேலும் மூவாயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு ''குமண'' என்ற கப்பல் கொழும்பிலிருந்து புறப்பட்டுள்ளது. தற்போது பருத்தித்துறையில் உணவுப் பொருள்களை இறக்கிவரும் ''குமாரி'' என்ற கப்பல் கொழும்பு திரும்பியதும் மேலும் ஒரு தொகுதி பொருள்களை ஏற்றிக் கொண்டு வருமெனவும் கூறப்படுகிறது. மறிலாக் என்னும் கப்பல் மன்னாரிலும், மெட்கா குளோரி கப்பல் காங்கேசன் துறையிலும் உணவுப்பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# வரி விளம்பரம்


## டில்கா வாச் வேக்ஸ்& றேடியோ வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றிகளும் எம்மிடம் உண்டு). தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும் DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வான்வில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5795)

## மிருதங்கம்

புதிய மிருதங்கம் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் ஒடருக்கு, சலுகையுடன் செய்து தரப்படும் தரகர் தேவையில்லை. நேரில் வரவும். கோவிந்தபிள்ளை விஜயகுமாரி மிருதங்கதொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி பெருமாள்கோயிலடி யாழ்ப்பாணம். (4125)

## வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், லேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் காண்பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி யாழ்ப்பாணம். (சி-5853)

## கலண்டர்கள் விற்பனைக்குண்டு

விறறுமுடிக்கும் நோக்குடன் திருவள்ளுவர் நாட்காட்டி மற்றும் 3 அளவுகளில் படக் கலண்டர்கள் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம். 48 மணிநேரத்தில் தங்கள் விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4173)

## விற்பனைக்கு

HONDA ஜெனரேட்டர், வீடியோ கமரா, 180 டெக், J.V C மிக்ஸர், டிடில் கமராக்கள் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு, B.S. போட்டோ, 40 A, ராஜேந்திரா வீதி, குருநகர். (சி/5899)

## வாடகைக்கு

படிக்கும் மாணவிகள் அல்லது வேலை செய்யும் பெண்களுக்கு மட்டும் அறைகள் வாடகைக்கு உண்டு நேரில் வரவும். ''பம்பாதரன் மாளிகை'', 20/1, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4054)


## நாய்களுக்கு தடுப்பூசி

(தொல்புரம்)

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய முன்றலில் நாளை முதலாம் திகதி திங்கட்கிழமை 9 00 மணியளவில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் வராமல் சுகாதாரபகுதியினரால் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக தொல்புரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் அனைத்து வீட்டு உரிமையாளர்களும் தவறாது தத்தமது வளர்ப்பு நாய்களுக்கு ஊசி மருந்தை ஏற்றிக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.


## தையற் பயிற்சி வகுப்புகள்

அனுபவம் வாய்ந்த டிப்புளோமாத் தகைமை உடைய ஆசிரியையால் 1 2 93 தொடக்கம் தையற் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படும். விஞ்ஞான முறையிலான வெட்டுக்களும் சித்திரவேலைப்பாடுகளும் பயிற்றப்படும். 414. கோவில் வீதி நல்லூர். (4174)

## பற் சிகிச்சை நிலையம்

கொக்குவில்/இந்து கல்லூரிக்குஎதிரில் கே.கே. எஸ் வீதி கொக்குவில். வா.நே தினசரி 4 பி.ப.- 6 பி.ப, ஞாயிறு: 10மு.ப - 12 ந.ப (4056)


## உணவு முத்திரை வழங்கல்

(வடமராட்சி)

வடமராட்சி கல்விக் கோட்டப் பிரிவு பாடசாலைகளில் மாணவர்களுக்கான ஒக்டோபர் மாத மதிய உணவு முத்திரை வழங்கப்பட்டு வருகிறது. (யோ)

## முதலுதவி நிலையம் திறக்கப்பட்டது

நாவலடி டயஸ் குடியிருப்பில் தீவக வி.பு.மகளிர் அமைப்பினரால் அமைக்கப்பட்ட லெ டினன்ட் டில்லி (செல்வி) முதலுதவி நிலையம் சென்ற திங்களன்று தீவக மகளிர் அமைப்பு பொறுப்பாளர் அன்பரசி தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் குடியிருப்பு தலைவர் திரு. ஜேம்ஸ், குடியிருப்பு பொறுப்பாளர் திரு. சுபாஸ், வனிதா குடியிருப்பு பொறுப்பாளர் திரு தேவன், தீவக மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர். திரு. இராசலிங்கம். யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பதில் பொறுப்பாளர் செல்வி கருணா ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தி சிறப்பித்தனர்.

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர்க்கான ஜனவரி மாதக் கொடுப்பனவு 27ஆம் திகதி தொடக்கம் அடைக்கல மாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுவதாக அதன் முகாமையாளர் திரு. து. வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (22)

## விளையாட்டு

(தென்மராட்சி)

கைதடி நவீல்ட் பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்படி பாடசாலை மாணவர்களுக்கும், லியோ கழகத்தினருக்கும் இடையே வலைபந்தாட்டம், உதைபந்தாட்டம், கயிறிழுத்தல் ஆகிய சுற்றுப் போட்டிகள் இடம் பெற்றன.

இதில் வலைபந்தாட்டத்தில் நவீல்ட் பாடசாலை மாணவிகள் அணி வெற்றியீட்டியது. கயிறிழுத்தல், உதைபந்தாட்டம் என்பவற்றில் லியோ கழக அணிகள் வெற்றியீட்டின. (மு)

## ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

சிறிலங்காவில் காணாமல் போனோரை கண்டு பிடிக்கவும் விசாரிக்கவும் ஜனாதிபதி, ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## சேவை நலம் பாராட்டு

வேலணைக் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி யாழ் கல்வித் திணைக்கள முகாமைத்துவப் பிரிவுக்கு பொறுப்பான உதவியோகத்தராக இடம்மாறிச் சென்றுள்ள திரு சி. புலேந்திரன் அவர்களின் சேவையைக் கௌரவிக்கும் முகமாக வேலணைக் கோட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் நலன்விரும்பிகள் கூட்டுறவாளர்கள் அனைவரும் இணைந்து சேவை நலம் பாராட்டு விழாவொன்றை ஏற்பாடு செய்துள்ளனர் இவ் விழா எதிர்வரும் வியாழன் காலை ஒன்பது மணியளவில் யாழ் பனிப் பரியோவான் கல்லூரியில் நடைபெறவுள்ளது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1993 03 10 ஆம் திகதி என்னாக் பெற்றுக் கொள்ளப்படும்.

தற்காலிக போதனாசிரியர் (கணனிப்பகுதி)

சம்பள அளவுத்திட்டம்

தற்காலிக போதனாசிரியர் (கணனிப்பகுதி) - ரூபா 3,737.50 (நிலையானது) மாதமொன்றிற்கு

(பரீட்சை பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ரூபா3,487.50 நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.)

தகைமைகள்

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக்கிளை சிரேஷ்ட பதிவாளர் அறைதோமில் இருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். படிவங்களையும், ஏனைய விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 20/- காசுக்கட்டளை/தபாற்கட்டளையை 23x10 சமீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிகப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993. 01. 29

(சி-5911)


புதிதாக கொள்வனவுசெய்த

# 'ஏயார் பஸ்' விமானங்கள் சேவை இடைநிறுத்தம்

## நட்டஈடு கோர ஏயார் லங்கா முடிவு

(கொழும்பு)

புதியதாக கொள்வனவு செய்த ''ஏயார் பஸ்'' விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டமையினால் ஏயார்லங்கா நிறுவனம் மிகவும் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதனால் விமானம் கொள்முதல் செய்த நிறுவனம் தொடர்பாகவும், உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்த நிறுவனத்திடமும் நட்டஈடு பெறுவதற்கு ஏயார் லங்கா நிறுவனம் தீர்மானம் எடுத்துள்ளது.

ஏயார் லங்கா நிறுவனம் அண்மையில் எட்டு ஏயார் பஸ் விமானங்களை கொள்முதல் செய்தது. இதற்காக நிறுவனம் செலவிட்ட தொகை பத்து லட்சத்து ஏழுநூறு டொலர்கள் ஆகும். இதில் 320 ரக ஏயார் பஸ் விமானங்கள் மூன்றையும், 340 ரக ஏயார் பஸ் விமானங்கள் ஐந்தையும் கொள்முதல் செய்தது.

இந்த ஏயார்பஸ் விமானங்கள் உற்பத்தி செய்தது சர்வதேச ஏரோ இன்சினியர் நிறுவனம் ஆகும். இந்த ஏயார் பஸ்களை ஜனவரி 15-ம் திகதி சேவையில் ஈடுபடுத்தப்பட்டாலும் ஜனவரி 18-ம் திகதி ரத்து செய்யப்பட்டது. நான்கு தினங்கள் மட்டுமே இந்த ஏயார்பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிநுட்பவியலாளர்கள் இவற்றைபரிசீலனை செய்ய நேரிட்டதாகவும், இதனால் ஏற்பட்ட அபகீர்த்தியும், நட்டத்தையும் ஈடுசெய்வதற்கே நட்டஈட்டை கோரப் போவதாகவும் ஏயார் லங்கா நிறுவனம் தெரிவிக்கின்றது.

## மூளைக்காய்ச்சலால் மரணமானார்

(குருநகர்)

யாழ் சென் றோக் வித்தியாலய 7 ஆம் ஆண்டு மாணவி செல்வி ரட்ணராஜா பிரிசில்டா மேரி (வயது 12), கடந்த 19 ஆம் திகதி மூளைக்காய்ச்சல் நோயால் யாழ் போதனா வைத்தியசாலையில் பலியானார்.

இவர் குருநகர் தொடர் மாடிக்கு அருகாமை கடற்கரை வீதியைச் சேர்ந்தவர். (21)

# விமான கட்டணம் குறைக்க ஏயார்லங்கா தீர்மானம்

(கொழும்பு)

சர்வதேச விமானக் கட்டணங்கள் விரைவில் குறைக்கப்படவுள்ளதாக ஏயார்லங்கா நிறுவன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏயார்லங்கா நிறுவனம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கான கட்டணங்களில் பத்துசத வீதம் குறைக்கவுள்ளது.

இதன்படி டுபாய், அபுதாபி, சாஜா, சூரிச், றோம், லண்டன் ஆகிய இடங்களுக்கான கட்டணமே குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


# நினைவு கூருகின்றோம்..

## 1993-1-31

1986 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்- தொண்டமானாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் சுருளி (பாலசிங்கம் மனோகரன் - உவர்மலை - திருக்கோணமலை.)

மடுக்கந்தை முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்- பருத்தித்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். ஜெனா (நாகலிங்கம் சிவகுமார் - 6-ம் வட்டாரம், நயினாதீவு - யாழ்ப்பாணம்.)

கண்ணன் (திவாகரராசா சிவயோகன் - தெணிஅம்மன் வீதி, அல்வாய் வடக்கு, தம்பசிட்டி, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்.)

வெள்ளை (தில்லையம்பலம் தேவராஜா - பனிக்கவளவு, அல்வாய் வடக்கு, தம்பசிட்டி, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்.)

1988 ஆம் ஆண்டு இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -

ரவியன் (கணேசலிங்கம் ரவிச்சந்திரன் - பிள்ளையார் கோவிலடி, கட்டுவன், தெல்லிப்பழை-யாழ்.)

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம்-கரவெட்டி வதிரிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1991 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

வசிட்டன் (கணபதிப்பிள்ளை அருணசேகரன் -கோண்டாவில் கிழக்கு - யாழ்ப்பாணம்.)

கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த -

லவன் (செல்லையா உதயகுமார் - குடியிருப்பு, மந்துவில், கொடிகாமம் - யாழ்ப்பாணம்.)

வவுனியா தடைமுகாமருகே கொழும்பு செல்வதற்கெனக் காத்திருந்த பயணிகள் மீது காவலரணிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-5907)

# பத்திரிகை முதலாளிகள் அரசை கட்டுப்படுத்த முடியாது

## -பிரேமதாசா எச்சரிக்கை

[கொழும்பு]

பத்திரிகை முதலாளிகளால் அரசைக் கட்டுப்படுத்த முடியாது என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறினார். நடந்த வியாழன்று நடந்த பொதுக்கூட்டமொன்றில் அவர் மேலும் கூறுகையில்; ஏழை மக்களின் நலன்களைப் பேண அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் முதலாளிகளால் நடத்தப்படும் பத்திரிகை நிறுவனங்களால் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தி வழிநடத்த முடியாது என்று தெரிவித்தார்.

அண்மைக்காலமாக தென்பகுதிப்பத்திரிகைகளில் சில அரசாங்கத்தை கண்டித்தும், எதிர்த்தும் எழுதி வருவது தெரிந்ததே. மேலும் பத்திரிகைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதும், பத்திரிகையாளர்கள் அரசை எதிர்த்து கண்டனக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்திவருவதும் குறிப்பிடத்தக்கது.

# திருமலை மாவட்டத்தில் சிங்கள குடியேற்றம் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

திருமலை மாவட்டத்தில் சிங்களக்குடியேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் இந்தியாவுக்கு அகதிகளாகச்சென்றதமிழ் மக்களின் வீடுகளிலும், காணிகளிலும் பெரும்பாலான சிங்களவர் குடியேறி வருவதாகவும் கடந்த காலங்களில் திருமலை கிராமப்புறங்களில் நடைபெற்றுவந்த இந்த அடாவடித்தனமான குடியேற்றம் தற்போது திருக்கோணமலை நகர்ப்பகுதிகளிலும் பரவலாக நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

இங்குள்ள இந்து சமயத்தவர்களின் ஆலயங்கள் உள்ள அனேக காணிகளில் சிங்கள மீனவர்கள் வீடுகள், குடிசைகள் அமைத்து குடியேறி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

நகர்புறங்களில் உள்ள பல தமிழ் மக்களின் வீடுகளில் கடல்தொழில் செய்யும் சிங்களமீனவர்களின் குடும்பங்கள் அண்மைக்காலமாக குடிஅமர்த்தப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வருங்காலத்தில் திருமலை மாவட்டத்தில் சிங்களவர் குடியேற்றம் அதிகரிக்கும் சூழ்நிலை உருவாகி வருவதாகத் தமிழ்மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். [24]

# அரச கூட்டுத்தாபனங்களின் கலைப்பிற்குக் காரணம் அரசியல் தலையீடே ஆகும்

[கொழும்பு]

''அரசியல் தலையீடும், சீரற்ற நிர்வாகமும், ஊழலுமே அரச கூட்டுத்தாபனங்கள் கலைக்கப்படுவதற்கு முக்கிய காரணங்களாகும். கிராமிய மட்டத்திலிருந்து உயர் மட்டம்வரை அரசியல் தலையீடு அதிகரித்துக் காணப்படுகிறது'' என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி யான எஸ்.எஸ்.எம் அபூபக்கர் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

இரு அரச கூட்டுத்தாபனங்களைக் கலைப்பது தொடர்பான பிரேரணைகள் மீது பேசிய அவர் மேலும் கூறியதாவது;

15 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம்பற்றி இப்போது பரந்தளவில் பிரசாரம் செய்யப்படுகிறது. அதேவேளையில் கட்டடப் பொருள்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தைக் கலைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. இந்தக் கூட்டுத்தாபனத்தை மூட வேண்டியதன் அவசியம் என்ன?

எந்தக் கூட்டுத்தாபனங்களையும் அரசால் சீராக நடத்த முடியவில்லை காரணம் அரசியல் தலையீடும், ஊழலும் மலிந்து விட்டன ஆரவாரமாக விழா நடத்தி திறக்கப்பட்ட கூட்டுத்தாபனங்கள் யாவும் இன்று ஆரவாரமின்றி மூடப்படுகின்றன.

தேர்தலில் தோல்வியடையும் அரசியல்வாதி கூட்டுத்தாபனத் தலைவராகி விடுகிறார். இதனால் சீரற்ற நிர்வாகம் காணப்படுகிறது.

ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளும் பெரும் பிரசாரத்துடன் திறக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் இவற்றையும் மூடும் நிலை வரக்கூடாது. இவை மூடப்பட்டால் பாரிய பொருளாதார இழப்பு ஏற்படும். பிரதேச செயலகங்களுக்கும் இந்தக் கதி வந்து விடக்கூடாது என்றார்.

# தொற்றுநோய் பரவுவதற்கு பொரு. தடையே காரணமாகும்

வடபகுதிக்கு 'குளோரின்' மலத்தியோன் கொண்டு வருவதற்கு இராணுவம் தடை விதித்துள்ளதினாலேயே இங்கு பல தொற்றுநோய்கள் மிக வேகமாகப் பரவுவதற்கு முக்கிய காரணம் ஆகும்.

இவ்வாறு அரசு சார்பற்ற தொண்டர் ஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து நாம் குளோரினை இங்கு கொண்டு வருவதற்கு எவ்வளவோ முயன்றும் இராணுவ முப்படைத் தலைமைச் செயலகம் மறுப்புத் தெரிவித்துவிட்டது.

மாரிகாலத்தின் போது தண்ணீர் பெருமளவில் அசுத்தத் தன்மையாக காணப்படுகிறது அத்தகைய தண்ணீரை மக்கள் பருகுவதால் நெருப்புக்காய்ச்சல், வயிற்றுவலி, வயிற்றோட்டம், செங்கமாரி, மலேரியா போன்ற பல தொற்று வியாதிகள் இங்கு வேகமாகப் பரவி வருகின்றது.

மக்கள் குடி தண்ணீரைச் சுடவைத்து ஆறிய பின் குடித்தால் இந்த வியாதிகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (24)

# லவனிதா குடியிருப்பில் கௌபீ, வற்றாளை செய்கை

தீவக பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால்நடைமுறைப் படுத்தப் பட்டுவரும், வீட்டுத் தோட்டத்திட்டத்தின் கீழ் நாவற்குழி லவனிதா குடியிருப்பு மக்களால் செய்கை பண்ணப்பட்ட கௌபீ, சீனிவற்றாளை போன்ற பயிர்கள் நல்ல பயனைக் கொடுத்துள்ளதாக தெரியவருகிறது. அரிசி மா போன்ற உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில் அன்றாட உணவுத் தேவையை இவை பூர்த்தி செய்துவருகிறது எனவும் கூறப்படுகிறது.

# ஜனாதிபதி நடமாடும் செயலகம் அடுத்தது மட்டக்களப்பிலாம்

(திருக்கோணமலை)

ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் பன்னிரண்டாவது அமர்வு மட்டக்களப்பு நகரில் நடைபெறவுள்ளது. இதற்கான தீர்மானத்தை நேற்று முன்தினம் திருக்கோணமலையில் நடைபெற்ற ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் போது ஜனாதிபதி பிரேமதாசா மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய அரசின் செயல் அடாவடித்தனமானது

## - ஒய்வூதியர் சங்கம் கண்டனம்

[வல்வெட்டித்துறை]

சமாதானத் தூது ஒன்றை மேற்கொண்டு வந்த தளபதி கிட்டு அவர்களையும், அவருடன் வந்த ஒன்பது புலிப்படை வீரர்களையும் வங்கக் கடலில் வழிமறித்த இந்திய அரசின் செயலைக் கண்டித்து வல்வெட்டித்துறை ஒய்வூதியர் சங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. சர்வதேச அமைப்புகள் மற்றும், ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து முன்வைத்த சமாதான யோசனையைத் தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசிப்பதற்காக வந்த வழியில் கேணல் கிட்டுவின் கப்பலை வழிமறித்த இந்திய அரசின் அடாவடித்தனமான, மிலேச்சத்தனமான, மனித நேயமற்ற முறையிலான செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்து இச்சங்கம் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.

# இலங்கையின் தென்பகுதி தீவாகலாம்

[கொழும்பு]

இலங்கையின் தென்பகுதி தீவாக மாறிவிடலாம் எனத் தெரிய வருகிறது இலங்கையின் தென்பகுதியில் சுண்ணாம்புக் கற்கள் பெருமளவில் தோண்டப்படுவதால் கடல் நீர் உட்புகுந்து தரைவழியாகத் துண்டிக்கப்படும் நிலை ஏற்படலாம் என்று பிரபல விஞ்ஞானியான ஆர்தர் சி. கிளார்க் கூறியுள்ளார்.

# டில்லியில் புலிகளின் தற்கொலைப்படை

(கொழும்பு)

புலிப்படையின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கிட்டுவின் சாவுக்குப் பழிவாங்க டில்லியிலும், சென்னையிலும் புலிகளின் தற்கொலைப்படை ஊடுருவி உள்ளது என்று ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

# சங்காபிஷேகம்

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் சங்காபிஷேகம் எதிர்வரும் 3.2.93 புதன்கிழமை நடைபெறவுள்ளது. பண உதவி பொருள் உதவி செய்ய விரும்பும் அடியார்கள் அவற்றை காரியாலயத்தில் கொடுத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# தற்கொலை

[வடமராட்சி]

பதின்மூன்று வருடங்கள் மனைவியுடன்ஏற்பட்ட மனத்தாக்கத்தால் பிரிந்திருந்த வயோதிய தம்பதிகளில் கணவன்கிருமிநாசினி அருந்தித்தற்கொலை செய்து கொண்டார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பசுபதி [வயது 65] என்ற வயோதிப குடும்பத் தலைவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை 27ஆம் திகதி நடைபெற்றது மரண விசாரணை அதிகாரி திரு. வீ ந ராசா மரணவிசாரணை செய்த பின்னர் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். [யோ]

# தமிழ்தினப் போட்டி இவ்வருடம் வவுனியாவில்

[யாழ்ப்பாணம்]

தமிழ்மொழித்தினப் போட்டிகள் இவ்வருடம் யூலை மாதத்தில் வவுனியாவில் இடம்பெற இருப்பதாக கல்வி உயர்கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

பாடசாலை மட்டத்திலும் பின்னர் கோட்டம் அல்லது பிரதேசச் செயலகம் நிர்வாக அமைப்பு மட்டம், மாகாண மட்டம், ஆகிய மட்டங்களில் முதனிலைப்போட்டிகள் நடைபெற்று தேசிய மட்டத்தில் இறுதிநிலைப் போட்டியும் தமிழ்மொழித்தின விழாவும் இடம்பெற உள்ளன. [17]


பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)

## தேவை

எமது சங்கலொறி இல. 27/2092ற்கு 120 அம்பியேர்ஸ்12 வோல்ட்டில்02 பற்றறிகள்தேவைப்படுகின்றன. விற்பனைக்கு வைத்திருப்போர் தயவு செய்து மேற்படி சங்கப் பொது முகாமையாளருடன் சங்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மா. சோமசுந்தரஐயர்
பொதுமுகாமையாளர்
1993-01-29

(சி-5904)



## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னையின் மடியில்
05-07-1948

அன்னியரின் கையில்
02-01-1993

அமரர்

### விசுவலிங்கம் செல்லத்துரை

(மன்னார் நீதிமன்ற ஊழியர்)

02-01-1993 அன்று கிளாலி கடற்பரப்பில் நடைபெற்ற சம்பவத்தில் சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு திரு. விசுவலிங்கம் செல்லத்துரை அவர்களின் ஆத்ம சாந்திக்கான நிகழ்வாக 01-02-1993 திங்கள் அன்று அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், மதியபோசனத்திலும், அன்னாருடன் சேவையாற்றிய நீதிமன்ற ஊழியர்கள, உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- அன்னாருடன் கடமைபுரிந்த சகஊழியர்களிற்கு நேரில்வந்து அறிவிக்க முடியாமைக்குவருந்துகின்றோம்.

நாவற்காடு,
வரணி

- குடும்பத்தினர்.

(சி-5910)

# அம்பாறை மாவட்ட அகதி முகாம்களில் தமிழ் மக்களின் அவலநிலை

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் யுத்தம் ஆரம்பமாகி இன்றைக்கு மூன்றாவது வருடத்தை எட்டிக் கொண்டிருக்கின்றது இடைப்பட்ட கால எல்லைக்குள் அம்பாறைப் பிராந்திய மக்கள் படும் அவல நிலையை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

பொத்துவில் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் யுத்தம் ஆரம்பமானதும் கோமாரி எனும் ஊரில் வந்து தஞ்சமடைந்தனர். தெரிந்தோரின் வீடுகள், பெரிய மர நிழல்கள், இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தன. ஓரிரு மாதங்களின் பின் இவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கங்களும், அரச நிவாரணமுமாகவும் ஓரளவு உலர் உணவுப் பொருள்கள் கிட்டியது. இராணுவத்தின் மிரட்டல் காரணமாக குடும்பத்தினர் தங்கள் 10 வயது மதிக்கத்தக்க ஆண்பிள்ளைகளை இராணுவத்திற்கு ஆயிரம் ரூபாய்க்கு விற்கின்றனர்.

இராணுவத்தின் வற்புறுத்தலினாலும், தங்கள் பிள்ளைகளை தங்களுடன் வைத்திருப்பதால் புலியெனக் கூறி அழைத்துச் சென்று கொன்றுவிடுகின்றார்கள் இராணுவத்தினர் என்பதால் இப்பரிதாப நிலைக்கு ஆளாக்கப்படுகின்றார்கள் கோமாரியில்வாழ்ந்து வரும் பொத்துவில் அகதிகள்.

இவர்களுக்கு தொழில் இல்லை. வேளைக்கு சாப்பிட முடியாத அவலநிலை. இதனால் இராணுவமுகாம்களுக்கு இராணுவத்தினர் இவர்களை அழைத்துச் சென்று இடம் துப்புரவு செய்வது, கிடங்குகள் வெட்டுவது, அரண்கள் அமைப்பது ஆகிய வேலைகளைச் செய்வித்து வருகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அகதிகளுக்கு கோமாரியில் சிறு, சிறு கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால் இக்கொட்டில்கள் அனைத்தும் காற்றோடு காற்றாகப் போய்விட்டது. இந்நிலையில் பெண்கள், குழந்தைகள், வயது முதிர்ந்த பெரியவர்கள் அனைவரும் கோமாரியில் உள்ள சிறிய பாடசாலையை நாடியுள்ளனர்.

அண்மையில் அரசால் வழங்கப்பட்டுவந்த உலர் உணவுப் பொருள்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இராணுவ உயர் அதிகாரியைக் கேட்டபோது உங்களுக்கு எந்த விதமான பிரச்சினையுமில்லை பாதுகாப்பை நாங்கள் தருவோம், நீங்கள் பொத்துவில் சென்று குடியமரலாம் என்கின்றனர். இப்பிரச்சினைக்கு தீர்வு இன்றேல் நாங்கள் பொத்துவில் செல்ல மாட்டோம் என பதில் கூறியுள்ளார்கள் பொதுமக்கள்.

அண்மையில் மூன்று இளம் பெண்கள் விறகு எடுப்பதற்காக பக்கத்திலுள்ள சிறிய காட்டினுள் சென்றுள்ளார்கள் இவர்களின் வருகையை எதிர்பார்த்த இராணுவத்தினர் பற்றைக்குள் மறைந்திருந்து இம்மூன்று பெண்களையும் வாயைப் பொத்தி தூக்கிக்கொண்டு அம்மூன்று பெண்களையும் பாலியல் வன்முறைக்குள்ளாக்கியுள்ளார்கள். பெண்களின் பெற்றோர் இது சம்பந்தமாக செஞ்சிலுவைச்சங்கத்திடம் விபரம் எடுத்துச் சொல்லி, சங்கத்தினர் கேட்டபோது அப்படித் தாங்கள் செய்யவில்லையென இராணுவத்தினர் பதிலளித்தனர்.

அக்கரைப்பற்று வாழ் மக்களைப் பொறுத்த வரையில் இம்மக்கள் இரண்டு பக்கத்தில் துன்பப்படுத்தப்படுகின்றார்கள். சிறிலங்கா இராணுவத்தின் அட்டூழியங்களும், அக்கரைப்பற்று வாழ் முஸ்லிம்கள், முஸ்லிம் ஊர்காவற்படை, முஸ்லிம் ஜிகாத் படையினர்களின் சித்திரவதை, அதட்டல்களினாலும் பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இப்பகுதி மக்கள் அக்கரைப்பற்று கடைகளுக்குச் சென்று பிஸ்கட்டுகள் ஏதாவது வாங்க வேண்டுமாயின் முன் வாங்கிச் சென்ற பிஸ்கட்டுகளின் மேல் உறையைத் தர வேண்டும். இல்லையேல் அந்த பிஸ்கட் பெட்டி புலிகளுக்கு வாங்கிக் கொடுத்தவர் எனக் குற்றம் கடைக்காரரால் சாட்டப்பட்டு அவர்கள் ஆண், பெண் யாராக இருந்தாலும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்படுகின்றார்கள். அதன்பின் அவர்களை இராணுவம் விசாரணை செய்கின்றது. பிஸ்கட் பெட்டியின் மேல் உறையைக் காட்டித் திரும்ப பிஸ்கட் பெறலாம் என இராணுவ உயர் அதிகாரி பொதுமக்களிடம் கூறியுள்ளார்.

இவற்றை எல்லாம் கடந்து இவர்கள் பிஸ்கட் வாங்கி தங்கள் இல்லம் செல்லும்வேளையில், இதனைக் கிராம வீதிவால் வரும் இராணுவத்தினர் கண்டு, அவரை விசாரித்துவிட்டு, இச் சம்பவத்திற்குரியவர் பெண்ணாக இருந்தால் சோதனை ஒன்றும் செய்து பார்க்கின்றனர். அப்பெண்ணின் முதுகில் துப்பாக்கியை வைத்து விண்ணை நோக்கிச் சுடுகின்றனர். அப்போது அப்பெண் பயந்தால் உண்மையானவர், பயமின்றி அப்பெண் சிரித்தபடி நின்றால் இப்பெண் புலியுடன் தொடர்புடையவர் என்பது இராணுவத்தினரின் முடிவு. இதன் பின் பல கேள்விகளைக் கேட்டு விசாரணை தொடர்கிறது. அதன்பின்னர் விடுதலையும் கிடைக்கலாம், கைதும் இடம்பெறலாம்.

தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பொதுவான ஓர் இடத்தில் தான் அக்கரைப்பற்று பேருந்து நிலையம் இருந்தது. இது முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு அற்ற இடம் எனக் கருதி அதனை முஸ்லிம்கள் வாழுகின்ற பகுதிக்குள் ஏற்படுத்தியுள்ளனர். இதனால் தமிழ்மக்கள் பயத்துடன் பேருந்து நிலையத்தை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.

அதுமட்டுமின்றி தமிழ்ப் பகுதியில் காலம் காலமாக இருந்து வந்த (டிரான்ஸ்போமர் மின்சேகரிப்புக் கருவியை முஸ்லிம் பிரிவுக்குள் கொண்டு சென்றுள்ளனர் இதனால் சிலவேளைகளில் தமிழ்ப் பகுதியில் மின் துண்டிப்பும் செய்யப்படுகின்றது. அண்மையில் அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரிக்கப்பட்டதில் முஸ்லிம்களின் எல்லைகள் தமிழ்ப் பகுதியை ஊடறுத்து சாரதா படமாளிகை வரை சேர்க்கப்பட்டுள்ளது. இது வாக்காளர் தொகையைக் குறைப்பதற்கு முஸ்லிம் உதவி அரச அதிபரின் சதி வேலைகளில் ஒன்று.

இருந்தும் பேருந்து நிலையம், மின் சேகரிப்பு இயந்திரம், வட்டாரப் பிரிவு இதற்கு எந்தவித எதிர்ப்பையும் காட்டாது அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் திவ்வியநாதன் முழு ஒத்தாசைகளையும் வழங்கினார். இவர் திறப்பு விழாக்களிலும் கலந்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆண்டாண்டு காலமாகப் பொத்துவில் பாணமையில் தமிழ்ப் பள்ளிக்கூடம் இருந்து வந்தது யாவரும் அறிந்த ஒன்று புலிகள், அரசின் போரின் பின் பாணமையில் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் அனைத்தும் அகதிகளாக வந்து கோமாரியில் அகதி முகாம்களில் வாழ்கின்றார்கள்.

பாணமையில் தமிழ்ப் பிள்ளைகள் படித்து வந்த தமிழ்ப் பள்ளிக்கூடம் இன்று இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்கும் (2500) மேற்பட்ட சிங்கள மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். அது மட்டுமல்ல உயர்தர வகுப்புகளும் உண்டு. சிங்களக் குடியேற்றம் மிக மும்முரமாக நடைபெற்று வருகின்றது என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு.

### கல்முனை அகதி முகாம்கள்

கல்முனை அகதிமுகாம்களில் சவளக்கடை, 4-ம் கொலனி, சென்றல்கேம், சொறிக்கல்முனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள்.

இவர்கள் அன்றாடம் தொழில் செய்ய மிகவும் கஷ்டத்தின் மத்தியில் இருக்கின்றார்கள். அரச நிவாரணப் பொருள்களும் கிடைப்பது அரிதாகிவிட்டது. இதே நேரம் அடிக்கடி முகாம்கள் இராணுவத்தினராலும், முஸ்லிம் காடையர்களாலும் சுற்றிவளைக்கப்படுகின்றது கைது செய்யப்படுவோர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படுகின்றார்கள். சந்தேகத்துக்குரிய இளைஞர்கள் எனக் கருதப்படுவோர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் சென்று கையொப்பமிட்டு வர வேண்டும். இதே நேரம் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள கிராம மக்களின் வயல் நிலங்களை முஸ்லிம்கள் தங்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றார்கள். அக்கிராம மக்களின் வீடுகள் உடைக்கப்பட்டு அதிலுள்ள பொருள்கள் அனைத்தும் முஸ்லிம் காடையர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

### காரைதீவு அகதிமுகாம்கள்

வீரமுனை, சம்மாந்துறை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி மல்லிகைத்தீவு, நெல்லிவட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காரைதீவு அகதி முகாம்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் வீரமுனை, சம்மாந்துறை வாழ் மக்கள் இராணுவத்தினதும், திவ்வியநாதன் எம்.பி யின் பலாத்காரத்தினாலும் வீரமுனையில் சிறு சிறு குடில்கள் அமைத்து பயத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

தங்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்று குடியேறினால்தான் அரசால் வழங்கப்படும் உணவுப் பொருள் கிடைக்கும். குடியேற மறுப்பவர்களுக்குக் கிடையாது என காரைதீவு இராணுவ அதிகாரியும், திவ்வியநாதன் எம்.பியும் கூறியதனால்தான் அக்கிராம மக்கள் அம்முடிவிற்கு வந்தனர். இருந்தும் ஏனைய கிராம மக்கள் அவர்களின் இடத்திற்குச் செல்ல மறுத்து விட்டனர். இவர்கள் இரவு பகல் எந்த நேரமுமின்றி முஸ்லிம்களின் பயமுறுத்தல்களின் மத்தியில் வாழ்கின்றார்கள்.

---

## ஈழநாதம் 3ஆம் ஆண்டு நிறைவுப் போட்டி

**சிறுகதை, கவிதை, கருத்துப்படம்**

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500ரூபா ரொக்கப் பணம்.

இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்

மூன்றாம் பரிசு: 1000 ரூபா ரொக்கப் பணம்.

போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

**முடிவு திகதி: 05/02/1993**

---

## பாடசாலையில் திருட்டு

(தென்மராட்சி)

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் அலுவலகம் உடைக்கப்பட்டு அங்கிருந்த சிறுதொகைப் பணம் கொள்ளையிடப் பட்டுள்ளது

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்படி பாடசாலை அதிபர் காவல்துறையினரிடம் இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. (மு)

## மரத்தால் விழுந்தவர் மரணம்

மரத்தில் இருந்து விழுந்ததால் காயமுற்று சிகிச்சைக்காக யாழ்ப்பாதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவர் மரணமானார்.

அளவெட்டி பகுதியைச் சேர்ந்த மார்க்கண்டு என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை தென்னைமரத்தில் ஏறியபோது தவறுதலாககீழே விழுந்துவிட்டார் பின்னர்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மரணத்தை தழுவிக்கொண்டார். (நி)

---


## குரக்கன் கொள்வனவு

எமது தேவைக்கு தரமான குரக்கன் கொள்வனவு செய்யப்படும். நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

உரிமையாளர்
கணேசா ஸ்ரோர்ஸ் அன்
குயிலநாதன் நியூஸ் ஏஜென்சி

நாவலடி சந்தி,
அல்வாய். (சி-5909)

## விற்பனைக்கு உண்டு

**இந்தியன் ஒலிம்பியா எஞ்சின்**

கிராங் உடைந்த நிலையில் மிகுதி பாட்ஸ் நல்ல நிலையில் உள்ளது. மிகக் குறைந்த தேய்வனவு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

S. S. R அரிசி ஆலை
முதலாம் கட்டை
டச்சுவீதி, சாவகச்சேரி
(4166)

### சிந்தனைக்கு

அதிகம் பழகினால் அசட்டை வந்துவிடும்என்றில்லை ஆனால் மதிப்பு மழுங்கச் செய்யப்பட்டுவிடும்.

- வில்லியம் ஹேஸ்லிட்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 31 - 01 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

# பயணங்கள் பயன் உள்ளதாக வேண்டும்

கத்தோலிக்க குருமார்கள் சிலருடனும், முன்னர் யாழ். வந்து திரும்பிய பிக்குகள் இருவருடனும் இணைந்து யாழ்ப்பாணம் வருவதற்கு மேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவரான ஒஸி அபயகுணசேகரா ஆயத்தமாகி வருவதாக பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

சிறிலங்கா மக்கள் கட்சியின் (ஒஸி பிரிவு) தலைவரும் தற்பொழுது சிறிலங்கா ஜனாதிபதியின் முக்கிய பேச்சாளருமான ஒஸி அபயகுணசேகரா யாழ்.வருவதென்பது கடந்த காலத்தில் சமாதானத் தூதுக்குழுக்கள் மேற்கொண்ட விஜயங்கள், மதகுருமார்கள் மேற்கொண்டுவந்த நல்லெண்ணப் பயணங்கள் ஆகியவற்றிலிருந்து சற்று வேறுபட்டது தான். அதாவது மதத் தலைவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பதை பலரும் ஏற்றுக்கொள்வர்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நல்லெண்ண விஜயங்களை மேற்கொண்டு பல சமாதான அமைப்புக்களும், மத குருமார்களும், பௌத்த பிக்குகளும் வடக்கே வந்தார்கள், புலிகளுடன் பேசினார்கள். சென்றார்கள். இறுதியாக அங்கிலிக்கன் திருச்சபை ஆயரும் வந்து சென்றார். ஆனால், அவற்றால் ஏற்பட்ட பலாபலன்கள் எவை என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

வடபகுதிவந்து சென்றவர்கள் எல்லாம் தமிழ் மக்கள் படும் துன்பங்களைக் கண்டு கவலை கொள்வதாகத் தெரிவித்தனர். புலிகளின் நிலைப்பாட்டில் நியாயம் இருப்பதாகவும்கூறினர். ஆனால் இவை யாவும் பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டிகளுடன் நின்றுவிட்டன. இந்த கிறிஸ்தவ மதகுருமார்களையும, ஏன் பௌத்த குருமார்களையும்கூட சிறிலங்கா ஜனாதிபதி சந்திக்கவோ அன்றி அவர்களின் அபிப்பிராயங்களை செவிமடுக்கவோ இல்லை.

இந்நிலையில் யாழ்ப்பாணம் வந்து போனதே பெரும் சாதனை என்பதுடன் சமாதானக் குழுவினரதும், நல்லெண்ணத் தூதுக் குழுவினரதும் முயற்சிகள் யாவும் நின்று போயின. தமிழ் மக்களின் பிரச்சினைகள், துன்பங்கள் எவையும் தீரவில்லை. அரசாங்கம் எதையும் கருத்திற்கொள்ளவும் இல்லை.

ஆயினும் ஒஸி அபயசேகராவின் முயற்சி கடந்தகால சமாதானத் தூதுக்குழுக்களின் வடிவத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சியில் யார் ஈடுபட்டாலும் அதைப் பற்றி தமிழ் மக்கள் எவரும் எதிர்ப்புத்தெரிவிக்கவோ அன்றித் தடுத்துவிடவோ போவதில்லை, ஆனால் சமாதான முயற்சியில் ஈடுபடுபவர்கள் இனப்பிரச்சினையை தீர்த்துவைக்கக்கூடிய சக்தி பொருந்தியவராக இருக்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும், அதாவது இதுவரை வந்துபோன சமாதானக் குழுக்கள் செய்யமுடியாததை ஒஸி அபயகுணசேகராவினால்செய்ய முடியுமா என்பதே கேள்வியாகும்.

திரு. ஒஸி அபயகுணசேகரா இன்று ஜனாதிபதியின் பேச்சாளராக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய ஒருசக்தி பொருந்தியவராக இருப்பாரா என்பது சந்தேகமே. அவ்வாறு சக்தி பொருந்திய ஒருவராக இருப்பின் ஒரு கட்சியின் தலைவராக இருந்து வேறொரு கட்சித் தலைவரின் பேச்சாளராக இருக்கமாட்டார் என்றே எண்ணத் தோன்றுகின்றது. இருப்பினும் ஒஸி அபயகுணசேகராவால் அது முடியுமானால் வரவேற்கத்தக்கதுதான். ஆனால் வடபகுதி விஜயம் தனது சுய விளம்பரத்திற்கான ஒன்றாக ஒஸி கருதுவாரேயானால் அது விரும்பத்தக்கதல்ல.

---

இஸ்ரேலுக்கு எதிரான தடை;

## பாதுகாப்புச்சபை விவாதத்தை ஒத்திப் போட வேண்டும்

**- அமெரிக்கா வற்புறுத்து**

(டெல்அவிவ்)

நாடுகடத்தப்பட்ட பாலஸ்தீனியர் தமது தாயகம் திரும்புவதை இஸ்ரேல் அரசு தொடர்ந்து எதிர்ப்பதால் அதற்கு எதிராகப் பொருளாதாரத்தடை கொண்டு வருவது பற்றி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை ஆராய்ந்து வருவதை ஒத்திப்போடுமாறு அமெரிக்கா வற்புறுத்தியுள்ளது.

இப்போதைய தேக்க நிலையை முடிவுக்கு கொண்டு வருவதில் ராஜ்யத்துறை முயற்சிகளுக்கு இடம் அளிக்கப்பட வேண்டும் என்பதாலேயே அமெரிக்கா இவ்விதம் வற்புறுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை பெருமளவு பாலஸ்தீனியர்கள் வெளியேற்றப்பட்டிருப்பது சட்ட விரோதமானது என்று இஸ்ரேலிய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதையடுத்து வெள்ளை மாளிகை இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

## பாகிஸ்தானுக்கு ரஷ்யா இராணுவ உதவி வழங்காது

**- பொரிஸ் யெல்சின் தெரிவிப்பு**

(டில்லி)

பாகிஸ்தானுக்கு ரஷ்யா இராணுவ உதவிகளை வழங்காது என்று ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் டில்லிப் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இந்தியாவில் இடம் பெறும் மதக்கலவரம் மற்றும் இந்து, முஸ்லிம் கலவரம் குறித்து வெளிப்படையாகவே பாராளுமன்றத்தில் கவலைதெரிவித்த அவர், இந்தியாவுடன் ரஷ்யா நெருக்கமான உறவுகளைக் கொண்டிருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

ஐ. நா பாதுகாப்புச் சபையில் இந்தியாவின் உறுப்புரிமை குறித்துப் பாதுகாப்புச் சபை ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டால் ரஷ்யா இந்தியாவின் உறுப்புரிமையை ஆதரிக்கும் என்றார்.

மேலும் அமெரிக்கா தடைவிதித்தால் கூட ரஷ்யா தான் வாக்குறுதி தந்தபடி 600 கோடி ரூபா மதிப்புக் கொண்ட ஏவுகணைத் தொழில் நுட்பத்தை இந்தியாவுக்குவிற்பனை செய்யும் என்றும் கூறியுள்ளார்.

20,000 கோடி ரூபா மதிப்பில் இந்தியா வாங்க முயற்சிக்கும் ஜம்பது போர்ப்பயிற்சி விமானங்களையும் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள் விற்பனை செய்யப் போட்டியிடுவது போல ரஷ்யாவும் இந்த விமானங்களை இந்தியாவுக்கு விற்பனை செய்ய போட்டியில் இறங்கும் என்று யெல்சின் குறிப்பிட்டார்.

ரஷ்யா, சீனா, இந்தியாவுக்கிடையில் நிலவும் தற்போதைய இணைப்பு உலகின் மேன்தன்மைக்கு வழிவகுக்கும் என்றார்.

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்று கூறிய அவர், காஷ்மீர் பிரச்சனையில் இந்தியா நிலைப்பாட்டை ரஷ்யா ஆதரிக்கும் என்றார்.

யெல்சின் தனது மூன்று நாள் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று ரஷ்யா திரும்பினார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது

## வழக்குத் தாக்கல் செய்ய அநுமதிகோரி வழக்கு

(சென்னை)

முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் அவர் அமைச்சரவைச் சகாக்கள் மீது வழக்குத் தொடர அநுமதி கோரி தி. மு. க. பொதுச்செயலாளர் அன்பழகன் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ஜெயலலிதா மற்றும் அவர் அமைச்சர்கள் மீது தி. மு. க. சார்பில் ஆளுநரிடம் கொடுக்கப்பட்ட ஊழல் புகார்களின் அடிப்படையில் வழக்குத் தொடர அநுமதிக்க கோரியே வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

## நேரு விளையாட்டரங்கு விழாவில் ராவ் பங்குபற்றக் கூடாது

**- இளையபெருமாள் கோரிக்கை**

(சென்னை)

நேரு விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள விழாவில் பங்குபற்றக் கூடாது என்று மனித உரிமைக் கட்சியின் நிறுவனர் இளையபெருமாள் பிரதமர் பி வி. நரசிம்மராவுக்குத் தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார். சென்னையில நேரு விளையாட்டு அரங்கிற்கு முன்னால் இருந்த டாக்டர் அம்பேத்கார் சிலையை நீக்கிய மாதிரி அதே இடத்தில் நிறுவ தமிழ்நாடு அரசு மறுத்துள்ள நிலையிலேயே பிரதமருக்கு மேற்கண்டவாறு தந்தி அனுப்பப்பட்டுள்ளது.

## தமிழக அரசின் வழக்கு செல்லுபடியாகக் கூடியது

**- நீதிமன்றம் தீர்ப்பு**

(சென்னை)

தமிழக ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமிக்கு எதிராக முதலமைச்சர் ஜெயலலிதா சார்பில் தமிழக அரசு வழக்குத் தாக்கல் செய்திருப்பது செல்லுபடியாகத்தக்கது என்று சென்னை நகர சிவில்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார். ஜெயலலிதா மீது தாம் கூறிவரும் குற்றச்சாட்டுகள் முதலமைச்சர் என்ற வகையில் தொடர்பு அற்றது என்றும், அதனால் அவர் சார்பாக தமிழக அரசு வழக்கைத் தாக்கல் செய்ய முடியாது என்றும் கூறும் பூர்வாங்க ஆட்சேப மனுவொன்றை சுப்பிரமணியம் சுவாமி சென்னை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது தெரிந்ததே. இந்த ஆட்சேபமனுவை விசாரித்த நீதிபதி, ஜெயலலிதா மீது சுப்பிரமணியம் சுவாமி கூறும் குற்றச்சாட்டுக்கள் முதலமைச்சர் என்றவகையில் தொடர்புபட்டதே என்றும் அதனால் தமிழக அரசு வழக்கைத் தொடர்ந்தது என்றும் தீர்ப்பு அளித்தார். இவ்வழக்கின் விசாரணை மார்ச் பதினைந்தாம் திகதியன்று நடைபெறவுள்ளது.

### ஒற்றுமை முயற்சி

(சென்னை)

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் அனைத்துப் பிரிவினரும் ஒற்றுமையாகச் செயற்பட்டு கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்றுகாங்கிரஸ் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர்களில் ஒருவரான கருப்பையா மூப்பனார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மூப்பனாரின் இவ் வேண்டுகோளுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்நாடு காங்கிரஸ்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பு விசாரணைக்கு

## மாநில அரசுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும்

**- மத்திய அமைச்சர் அருணாசலம்**

தமிழ்நாட்டில் கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்ற மூன்று குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கும் காரணமானவர்களைக் கண்டுபிடிக்க தமிழக மாநில அரசுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும்என்று மத்திய அமைச்சர் எம். அருணாசலம் தெரிவித்தார். தஞ்சாவூர் அருகே திருவிடைமருதூரில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் அருணாசலம்மேலும் கூறுகையில்;

விவசாயத்தை அடிப்படையாக்க தொழில்களையும் மற்றும் குடிசைக்கைத்தொழில்களையும் ஊக்குவிக்க மத்திய அரசு மாநில அரசுக்கு உதவும் எனவும் தெரிவித்தார்.

### அமெரிக்கநீதிமன்றம் தீர்ப்பு

(டில்லி)

இந்தியாவில் யூனியன் கார்பைட் நிறுவனத்தின் நச்சுவாயுக் கசிவு ஏற்பட்டதன் காரணமாக நேர்ந்த விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும், இந்திய அரசின் மீதோ அல்லது யூனியன் கார்பைட் நிறுவனத்தின் மீதோ அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று அமெரிக்காவின் பெடரல் நீதிமன்றம் கூறிவிட்டது.

மாணவர் நிதியத்திற்காக
யாழ் பல்கலைக்கழக
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்
வழங்கும்
குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின்

**'யார்க் கெடுத்துரைப்பேன்'**

- நாடகம் -

இடம்: கைலாசபதி கலையரங்கம்
யாழ். பல்கலைக்கழகம்
காலம்: இன்று (31-1-93) ஞாயிறு
நேரம்: முற்பகல் 10-00 மணி
பிற்பகல் 4-00 மணி
அனுமதிச் சீட்டுக்கள் மண்டப வாயிலில்

விளம்பர உதவி ஞானம்-ஸ்ருடியோ
(4185)


## உதைபந்தாட்டப் போட்டி
### 31-1-93

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தும் காட்சி உதைபந்தாட்டப் போட்டி இன்று மாலை 3 மணிக்கு மேற்படி கழக மைதானத்தில் நடைபெறும்.

பங்கு பற்றும் கழகங்கள்

ஞானகலா A எதிர் புதிய நீக்கலஸ் A
சென்மேரிஸ் A எதிர் சென்றோக்ஸ் A

[4188]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புவனேஸ்வரி சபாபதி
[பவளம்]
(ஆசிரியை யா/ நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரி சபாபதி (ஆசிரியை, யா/நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை) காலமானார். அன்னார் சபாபதி (ஓய்வுபெற்ற கணக்காளர், புகையிரத நிலையம்) அவர்களின் அன்புமனைவியும், பலேந்திரன் (வேலைத்தலப் பரிசோதகர் புகையிரத திணைக்களம்) ராஜேந்திரன் (ஆசிரியர், டிறிபேக் கல்லூரி) சகுந்தலா, ரஞ்சனா, மஞ்சுளா, ஆகியோரின் அருமைத் தாயாரும், உமாகௌரியின் (ஆசிரியை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் கைதடி) அன்புமாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை [31-1-93] பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நுணாவில் கிழக்கு, தகவல்
சாவகச்சேரி. ச. சபாபதி
(4187)

## திருமதி வல்லிபுரம் மரகதம்

நாரந்தனை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கச்சேரியடியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய திருமதி வல்லிபுரம் மரகதம் அவர்கள் நேற்று (30 - 01 - 93) காலமானார். இவர் முன்னாள் எல்பிட்டிய சதானந்தன் ஸ்டோர்ஸ் உரிமையாளர் காலஞ்சென்ற திரு. M. V. வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியும் சதானந்தன் (உரிமையாளர் எல்பிட்டிய கோட்டல் மாலிகுளப), நித்தியானந்தன் (கனடா), சிவானந்தன் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும் கண்ணுத்துரை, இராசையா, காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம், துரைமணி, சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி (நயினாதீவு), இந்திரா, இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிகலா (மருத்துவபீடம் யாழ்ப்பாணம்), சந்திரகலா (கனடா), மதன் (கனடா), சங்கீதா, நித்தியகாந்தன், நிரோஸ்காந்தன், நிர்மலகாந்தன், நித்தியப்பிரியா, வாகீசன் (கனடா), சஜன் (கனடா), ஜனனி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (31 - 1 - 93) காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் துண்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இல: 25, பேரின்பநாயகம் ஒழுங்கை, சதானந்தன்
கச்சேரியடி, [மகன்]
யாழ்ப்பாணம். [4186]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அணிசாரா இயக்கத்தில் ரஷ்ய ஜனாதிபதி ஆர்வம்

(டில்லி)

அணிசாரா இயக்கத்தை தொடர்ந்தும் பேணிவருவதில் ரஷ்ய அதிபர் பொறிஸ்யெல்ட்சின் ஆர்வம் கொண்டிருப்பதாகவும், இது உற்சாகம் ஊட்டுவதாக இருப்பதாகவும் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா கூறியுள்ளார்.

இந்தியா வந்திருக்கும் ரஷ்ய அதிபரைக் கௌரவிக்கும் முகமாக குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விருந்துபசார வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசிய டாக்டர் சர்மா மேலும் கூறுகையில் பல்வேறு விடயங்களிலும் ஒத்துழைப்பை வளர்ப்பதன்மூலம் புதிய உலக முறைமையை ஏற்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஆசியாவில் அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டிற்கான ஒரு நம்பகமான உத்தரவாதத்தை இந்தியாவும் ரஷ்யாவும் கூட்டு முயற்சியாக ஈ... வதன் மூலம் தரமுடியு... றும் இரு நாடுகளும் நம்... தெரிவித்துள்ளன.

## பெண்கள் மீது 'அசிட்' வீச்... இணுவில் பகுதியில் சம்பவ...

(யாழ்ப்பாணம்)

இணுவில் புகையிரத நிலைய பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல் ஒன்றின் காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் தலையில் பலமாக தாக்கப்பட்ட நிலையிலும் இரு பெண்கள் 'அசிட்' வீச்சினால் காயமடைந்த நிலையிலும் உள்ளனர்.

மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து சுன்னாகம் ஆச்சிரமத்தில் வதியும் ஒருவருக்கும், காங்கேசன்துறை பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து இணுவில் புகையிரத நிலைய... வதியும் குடும்பத்தி... இடையே ஏற்பட்ட... வேற்றுமையே மேற்பட... பவம் நடைபெற கா... என தெரியவருகிறது.

தற்போது ஆச்சிர... வதியும் நபர் தனது ந... களுடன் இணுவிலில்வ... களின் இடத்திற்குச் ... கலாட்ட செய்தார் எ... அப்போது ஜெயந்தி (20), ரஞ்சினி 14) ஆகியோர்... அசிட் வீசப்பட்டது ... இவர்களின் மாமனா... தாக்குதல் நடாத்தப்ப... என்றும் அறியவருகின்றது.

## 21ஆம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் இருபத்தோராவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்தப் பொதுக்கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் மேற்படி லீக் பணிமனையில் நடைபெறவுள்ளது.

## பாலபண்டித வகுப்புகள் 6 ஆம் திகதி ஆரம்பம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தில் பண்டித வகுப்புகள் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் ஆரிய. திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கல்விக்கோட்டங்கள் தோறும் பாலபண்டித, பண்டித வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளது. முன்னோடியாக பண்டத்தரிப்புக் கோட்டத்தில் இவ்வகுப்புக்கள் எதிர்வரும் ஆறாம்திகதி சனிக்கிழமை தொடங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், கழக ஆசிரியர்களும் க.பொ.த. (உயர்தரத்தில்) தமிழில் திறமைச்சித்தி பெற்றவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து கொள்ளலாம்.

முன்பு பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டத்தில் இதற்காகப் பதிவு செய்துகொண்டவர்களும், புதிதாக பதிவு செய்ய விரும்புபவர்களும், எதிர்வரும் திங்கட்கிழமையன்று, மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பிற்பகல் 3. 00 மணிக்கு தவறாது ச... தரும்படி பண்டத்தரிப்... கோட்டப் பிரதிக் கல்... பணிப்பாளர் கேட்டுக்கொ... கின்றார்.

## ஜே. ஆர். அரசை...

...சுக்கு ஆதரவாக நடந்து கொண்டது.

விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக இந்திய இராணுவத்திற்குப் பாரிய இழப்புகள் ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்தே இந்தியா தனது இராணுவத்தை விலக்கிக் கொள்ளவேண்டி ஏற்பட்டது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் புலிகள் பயிற்சி பெறும் படங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## சிறுவனுக்கு... துப்பாக்கிச் சூ...

கட்டுவன் பகுதியிலிருந்... நேற்று மாலை ஐந்து மணியள... வில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிற்கு கட்டுவன் முனியப்பர் கோவிலடியைச் சேர்ந்த சிறுவர் ஒருவர் காயமடைந்தார்.

கட்டுவன் முனியப்பர் கோவிலடியில் ... ஏற்றிக்கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூடு வயிற்றில் பட்டு படுகாயமடைந்த ம பாஸ்கரன் [10] என்ற சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் [நி]

## வன்னி

யாழ்ப்பாணம் கொண்டுவர முடியாத நிலைமையினாலும் பெரும் தொகையான நோயாளர் பாதிப்பு அடைந்துள்ளனர்.

தற்போது வேகமாக பரவிவரும் காய்ச்சல், மலேரியா, செப்ரிசீடசியா, வயற்றோட்டம் போன்ற நோய்களினால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

இதேவேளை இம் மாவட்டங்களில் உள்ள புற்றுநோய், மார்புநோய், மனநோய் அடைந்தோர்களுக்கு மருத்துவவசதி அளிக்க அம் மாவட்டத்தில் முடியாத நிலையினாலும் யாழ் போதனாமருத்துவமனைக்கு கொண்டுவர போக்குவரத்து சீர் இன்மையினால் நோயாளர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதால் அண்மைக் காலங்களில் இம் மாவட்டத்தில் மரணவீதம் அதிகரித்திருப்பதாக அறிய வருகின்றது. இதேவேளை இராணுவ கெடுபிடி அச்சுறுத்தல் காரணமாக வவுனியா, அனுராதபுரம் ஆகிய வைத்தியசாலைக்கு நோயாளரை கொண்டுசெல்ல உறவினர் அஞ்சுகின்றார்கள்.

[நி]

## புலிகளின்

தயாராக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

தனது யாழ். விஜயத்தின் போது கொண்டு வந்த மகஜர்களை உரிய இடத்திற்கு அனுப்பியதாகவும்.

யாழ்பபாண மக்களின் தற்போதைய துன்ப வாழ்க்கையினை ஆங்கில திருச்சபையின் இங்கிலாந்து-கன்ரபரி அதிமேற்றிராணியாருக்கு மிக விரைவில் அறிவிக்க இருப்பதாகவும் ஆயர் தெரிவித்தார்.

மிகவிரைவில் சுமுகமான நிலை உருவாகும் என்றும் இதனையே பெரும்பாலான மக்கள் விரும்புகிறார்கள் என்றும் தென்னிலங்கை மக்கள் விழிப்பாக இருந்து அரசுக்கு ஒரு நெருக்கடியைக் கொடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விசாரணைக்குழு நியமிக்கப்படும்

திருமலை கடற்பரப்பில் அண்மையில் மூழ்கிய பயணிகள் படகின் விபத்துப்பற்றி ஆராய குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

## இலவச சிகிச்சை

யாழ். திவ்விய ஜீவன சங்கத்தின் ஆதரவில் நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகே உள்ள மேற்படி சங்க மண்டபத்தில் இன்றுகாலை 8 மணி முதல் 10 மணி வரை இலவச வைத்திய சிகிச்சை நடைபெறும்.

இதற்கான பொது வைத்திய சிகிச்சைகளை டாக்டர் சிவகணேசன் நடாத்துவார். மேலும் இச்சிகிச்சை ஒவ்வொரு முறையும் மாதத்தில் இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்படுகின்றது. (பா)

## அரசின்

எதிராக மாணவர்கள் நடாத்திய கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய மனித உரிமை குழுவைச் சேர்ந்த மாதவ போமதிலகே உரையாற்றுகையில்; "இன்று அரசாங்கத்தின் நோக்கம் பல்கலைக்கழகங்களை மூடி, மக்களின் நலன்களைச் சீர்குலைப்பதே" என்றார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 30 - 01 - 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8203

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

28-2956, 26-691, 24-9744, 24-5041, 24-9676.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

26-3582, 42-0849, 24-576, 40-630, 26-4568, 27-6692, 26 9745, 26-8419, 26-4429, 26 7217, 26 6335, 41-8823, 41-4176, 26-3183, 26-3429, 24-4636, 28-0940, 28-8589.